# கீதாசார்யன்



திருநின்றவூர் பக்தவத்ஸலன்

# கீதாசார்யன் 9

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | ஸித்தார்த்தி ஸு | ஆனி மீ | ஜூன் 79 | பகுதி:9




ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ. 10

விலை ரூ. 1-00

**அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபி ரக்ஷிதம்,**
**பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் (10)**

ஆகையால் பீஷ்மாசாரியரால் காக்கப்படும் நமது சேனை பாண்டவர்களை வெற்றி கொள்ளப் போதாது. பீமனால் காக்கப்படும் அவர்களது சேனையோ, நம்மை வெற்றிக் கொள்ளப் போதுமானது.

**அயனேஷு ச ஸர்வேஷு யதாபாக மவஸ்த்திதா:,**
**பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி (11**

எனவே நீங்கள் அனைவரும் நமது சேனையினுள் நுழையும் எல்லாவழிகளிலும் உங்கள் பகுதிகளைக் கைவிடாமல் நின்று கொண்டு, பீஷ்மரையே சூழ்ந்து நின்று காப்பாற்றுங்கள்.

**தஸ்ய ஸஞ்ஜநயந் ஹர்ஷம்குருவ் த்த்த: பிதாமஹ:,**
**ஸிம்ஹநாதம் விநத்யோச்சை: சங்கம் தத்மௌ**
**ப்ரதாபவாந் (12)**

மஹாபராக்ரமமுடையவரும், குருவம்சத்தில் உதித்தவர்களில் சிறந்தவரும், பிதாமகருமான பீஷ்மாசாரியர் துரியோதனனுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக பலமாக சிங்கநாதம் செய்து தனது சங்கை ஊதினர்.

**தத: சங்காச்ச பேர்யச்ச பணவாநக கோமுகா:,**
**ஸஹஸைவாப்ய ஹந்யந்த ஸசப்தஸ் துமுலோபவத் (13)**

உடனே சங்கங்கள், பேரிகைகள், பணவங்கள், கோமுகங், ஆநகங்கள் முதலிய பல வாத்தியங்களும் ஒலிக்கப்பட்டன. அந்த சப்தங்கள் மிகப் பெரிதாக ஆயின.

**ததச்வேதைர் ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநேஸ்த்திதௌ**
**மாதவ: பாண்டவச்சைவ திவ்யௌசங்கௌ ப்ரமது: (14)**

பின்னர் மாதவனும், பாண்டுபுத்திரனை அர்ஜுனனும் வெள்ளைப் புரவிகள் பூட்டிய தேரிலிருந்துகொண்டு தத்தம் சங்கங்களை ஊதினர்.

# திருநின்றவூர்

## T. A. பாஷ்யம்

**கண்ணன் :** பார்த்தா ! நம் ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்துள்ள திருத்தலங்கள் 108 என்று நம் பெரியோர்கள் கணக்கெடுத்துள்ளார்கள். அவற்றில் திருவல்லிக்கேணி, கோவில், திருமலை, பெருமாள் கோயில் ஆகிய நான்கு திவ்ய தேசங்களை கீதாசார்யன் மூலமாக) ஏற்கனவே ஸேவித்தாகி விட்டது. மற்ற திவ்ய தேசங்களையும் ஸேவித்துவிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. நீயும் வருகிறாயா ? நாமிருவருமாய்ச் சென்று முதலில் நமது சென்னை நகருக்கருகிலுள்ள (தொண்டை மண்டல) திவ்ய தேசங்களை ஸேவித்து விட்டு வருவோமா ?

**பார்த்தன் :** கண்ணா ! நானும் திவ்யதேசங்களின் அருமையையும் திவ்யதேசயாத்திரையின் பெருமையையும்பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனக்கும் எல்லா திவ்யதேசங்களையும் ஸேவித்துவிட வேண்டும் என்ற துடிப்பு இருந்தாலும் இதுவரை வாய்ப்பு ஏற்படவில்லை. இப்போதுதான் எம் பெருமான் திருவுள்ளம் பற்றினான் போலும். முதலில் நாம் எந்த திவ்யதேசத்திற்குச் செல்லலாம் ?

**கண்ணன் :** முதலில் நாம் சென்னைக்கு மிக அருகிலுள்ள **"திருநின்றவூர்"** திவ்யதேசத்திற்குப் போகலாம்.

**பார்த்தன் :** திருநின்றவூர் எங்கேயுள்ளது ? ரயில் மார்கமா ? பஸ் வசதிகள் உண்டா ?

**கண்ணன் :** திருநின்றவூர் சென்னைக்கும் திருவள்ளுருக்கும் இடையில், சென்னை-அரக்கோணம் ரயில் மார்க்கத்

தில் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து 31வது கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. ரயில் மார்க்கமாகவும் பஸ் மார்க்கமாகவும் போகலாம். இதனைப் பொதுவாகத் **தின்னனூர்** என்றே அழைக்கின்றனர். ரயிலில் சென்றால் ஸ்டேஷனிலிருந்து 1½ மைல் தூரம் நடக்க வேண்டும். சென்னை பிராட்வே பஸ் ஸ்டாண்டிலிருந்து "திருநின்றவூர்" என்றே பஸ் செல்கின்றது. அந்த பஸ் மூலம் சென்றால் சுமார் 2 மணி காலத்திற்குள் திருநின்றவூர் ஸன்னிதியின் பின் புறம் இறங்கிக் கொள்ளலாம். ஆதலால் நாமும் பஸ்ஸிலேயே போகலாமே!

**பார்த்தன் :** அப்படியே போவோம். போய்ச் சேருவதற்குள் அவ்வூர் பற்றிய விவரங்களைப் பற்றிச் சற்று அளவளாவலாமே! இந்த திவ்யதேசம் எந்த ஆழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பட்டது.

**கண்ணன் :** இந்த திவ்யதேசத்தை திருமங்கை ஆழ்வார் இரண்டு பாசுரங்களில் மங்களாசாஸனம் செய்துள்ளார். பெரிய திருமொழி 2—5—2 "பூண்டவத்தம்" என்ற பாசுரத்தில் "**நின்றவூர் நித்தலத்தை**" என்றும், 7—10—5 "ஏற்றினை இமயத்துள்" என்ற பாசுரத்தில் "**நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை**" என்றும் பாடியுள்ளார்.

**பார்த்தன் :** திருநின்றவூர் என்று பெயர் வரக் காரணம் என்ன?

**கண்ணன் :** ஸ்ரீமந் நாராயணன் தனது திருத்தேவியான பெரிய பிராட்டியாரைத் தேடிக் கொண்டு சென்றவளவில், இந்த ஸ்தலத்தில் பெரியபிராட்டியார் விரும்பி வாஸம் பண்ணுவதை கண்டான் என்று ப்ரஹ்மாண்ட புராணம் தெரிவிக்கிறது. அதனால் இது ஸ்ரீநிவாஸக்ஷேத்ரம் என்றும் திருநின்றவூர் என்றும் வழங்கப்படுகிறது. இது பற்றி சுவையாக மற்றொன்றும் கூறுவர்.

**பார்த்தன் :** நாம் ஊர் போய் சேர்வதற்கு இன்னும் ஒரு மணி காலமாவது ஆகும் போலிருக்கிறதே. அந்த மற்றொரு கதையையும் கூறுகிறாயா ?

**கண்ணன் :** திருமங்கையாழ்வார் ஒவ்வொரு திவ்யதேசமாக மங்களாசாஸநம் செய்து கொண்டே வருகையில் இத்திருநின்றவூருக்கும் வந்தாராம். அப்போது இவ்வூர்ப்பெருமான் பிராட்டியுடன் ஏகாந்தமாக இருந்து விடவே திருமங்கையாழ்வாரை கவனிக்கவில்லை. இது கண்ட திருமங்கையாழ்வார் பெருமாளை மங்களாசாஸனம் செய்யாமலே சென்று விட்டாராம். பின்பு இதை அறிந்த பிராட்டி பெருமாளை நோக்கி "ஐயோ ஏமாந்து விட்டீரே! ஆழ்வார் பாசுரம் பெறும் பாக்கியத்தை இழந்து விட்டீரே! உடனே போய் அந்த ஆழ்வாரைப் பார்த்துப் பாசுரம் பெற்றுவாரும்" என்று துரத்த திருநின்றவூர்ப் பெருமானும் அவ்விதமே ஆழ்வாரைத் தேடிச் சென்றார். ஆழ்வார் திருக்கடன்மல்லையில் எம்பெருமானைப் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டு தமக்கும் ஒரு பாசுரம் ப்ரஸாதிக்கும்படி வேண்ட ஆழ்வாரும் "**நின்றவூர் நித்திலத்தை......கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே**' என்று பாடினார். பக்தவத்ஸலனும் சந்தோஷத்துடன், திரும்பி, தாயாரிடம் இதைத் தெரிவிக்க தாயார் போர உகந்தாலும் "நாதா! ஒவ்வொரு திவ்ய தேசத்து எம்பெருமான்கள் 100ம் 60ம் 20ம் பத்துமாகப் பாசுரங்கள் பெற உமக்கு மட்டும் ஒரே பாசுரம் தானா?" என்று குறையுடன் கேட்டாளாம். உடனே பெருமாளும் மீண்டும் திருமங்கையாழ்வாரைத் தேடிச்செல்ல அதற்குள் ஆழ்வார் திருக்கண்ணமங்கை சேர்ந்து அவ்வூர் எம்பெருமானைப் பாடிக் கொண்டிருந்தாராம். பக்தவத்ஸலன் மீண்டும் தன்னைப் பாடும்படி வேண்ட, ஆழ்வாரும் "**நின்றவூர் நித்திலத் தொத்தினை... ......கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே**" என்று பாசுரமருளிச் செய்தாராம். "ஒவ்வொரு திவ்யதேசத்து எம்பெருமான்கள் குறைந்தது பத்துப் பாசுரமாவது பெற்றுப் போக நமது பர்த்தாவுக்கு

மட்டும் இரண்டே பாசுரங்கள் தானு" என்று **திரு** (பிராட்டி) ஸ்தம்பித்து **நின்ற ஊர்** ஆகையால் இது **திருநின்றவூர்** ஆயிற்று என்று பெரியோர் கூறுவர்.

**பார்த்தன் :** ஆஹா! ஆச்சர்யமான விஷயமாய் இருக்கிறதே! பெருமாள் திருவருளுக்காக ஆழ்வார்கள் உருகியது போல ஆழ்வார் திருவருளுக்காகப் பெருமாளும் ஏங்குகிருரே! சரி. திருநின்றவூர் வந்து விட்டது போல் இருக்கிறதே. இறங்குவோமா?

**கண்ணன் :** ஆம்! இறங்குவோம். இப்படி வா. இது தான் வருண புஷ்கரிணி. இதன் பின்னே உள்ள ஏரியைப்பார். அதன் கரையில் உள்ள ராமர் ஸன்னிதியை ஸேவி.

**பார்த்தன் :** ஆஹா! சக்ரவர்த்தி திருமகன் தான் எவ்வளவு அழகாக இருக்கிருன். சரி கோவிலினுள் செல்வோம். ஆமாம், இவ்வூர் பெருமாள் தாயார் பெயர்கள் என்ன? பக்த வத்ஸலன் என்ருயே! அது தானு?

**கண்ணன் :** ஆம். பெருமாள் **பக்தவத்ஸலன்** என்றும் தமிழில் **பத்தராவி** என்றும் அழைக்கப்படுகிருர். மூலவர் உபயநாச்சிமார்களுடன் எழுந்தருளி யிருக்கிருர். தாயார் திருநாமம் **என்னைப் பெற்ற தாயார்** என்பது. கிழக்கே திருமுக மண்டலம் ; நின்ற திருக்கோலம் வருணனுக்குப்ரத்யக்ஷம். ஸ்ரீநிவாஸ விமானம். வருண புஷ்கரிணி.

**பார்த்தன் :** இங்கே உத்ஸவங்கள் எப்போது?

**கண்ணன் :** பங்குனித் திருவோணம் தீர்த்தவாரியாக பத்து நாட்கள் ப்ரஹ்மோத்ஸவம். ஆவணி பௌர்ணமியில் பவித்ரோத்ஸவம். இவை இரண்டும் விசேஷமாக நடைபெறு

கின்றன. இந்தக் கோயில் பூராவும் ஸ்ரீமத்பரமஹம்ஸ திருமலை—திருப்பதி பெரிய ஜீயர் ஸ்வாமியின் அதீனத்திற்கு உட்பட்டது. பெரிய ஜீயர்ஸ்வாமி மடமும் கோயிலின் இடது புறத்தில் உள்ளது.

**பார்த்தன் :** கண்ணா! உன்னால்தான் இவ்வெம்பெருமானை ஸேவிக்கவும், திருநின்றவூரைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளவும் முடிந்தது. உன் போன்றவர்களுடன் திவ்யதேச யாத்திரை செய்தால்தான் பயனுள்ளதாக இருக்கும்.

**கண்ணன் :** சரி, சரி. நாம் அடுத்த திவ்ய தேசத்திற்கு செல்லுவோம் வா!

Grams GHEE Phone: 23092

AIM AT PERFECTION IN EVERYTHING
*—Chesterfiled*

**PERUMAL & CO.,**
142, AUDIAPPA NAICKEN STREET,
MADRAS - 600 001.
(Near Kothawal Market)

**Butter, Ghee and Oils, For Purity, Quality and Taste, Fixed Price and Standard Quality**
**We Served you for 45 Years**
**We Solicit your Co-operation to Serve you better in future**

BUY "PADMA COFFEE" FOR FLAVOUR & TASTE

# தேவு மற்றறியேன்

பிள்ளைலோகாசாரியர் அருளிச்செய்துள்ள **அஷ்டாதச ரஸஹஸ்யம்** என்ற பதினெட்டு ரஹஸ்ய நூல்கள் கொண்ட சீரிய க்ரந்தத்தில் **ஸ்ரீவசனபூஷணம்** என்பது, "ஸாங்காகில த்ராவிட ஸம்ஸ்க்ருதரூப வேதஸாரார்த்தஸங்க்ரஹ மஹாரஸ வாக்யஜாதம்" என்கிறபடியே, அறிய வேண்டுமர்த்த மெல்லாம் நிரம்பப்பெற்ற நிகரற்ற நூலாகும். இந்த நூல்,

**முன்னம் குரவோர் மொழிந்த வசனங்கள்**
**தன்னை மிகக்கொண்டு கற்றோர் தம்முயிர்க்கு—மின்னணியாச்**
**சேரச்சமைத்து அவரே சீர்வசனபூடணமென்**
**பேர் இக்கலைக் கிட்டார் பின்**

என்கிற உபதேசரத்தினமாலைப் பாசுரத்தின்படியே. பெரும் பாலும் நமது பூருவாசாரியர்களின் அமுதன்ன நன்மொழி களையே சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளதாகும். இந்த சாஸ்திரத்தில் முடிவானதாக அமைந்துள்ள பிரகரணம் **ஆசார்யாபிமானமே உத்தராகம்** என்ற ஸத்ஸம்ப்ரதாய உண்மையை வலியுறுத்துவதாகும். இதனை **சரமோபாய வைபவம்** என்று கொண்டாடுவர் பெரியோர். ஸதாசார்ய ஸம்பந்தமே இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவனஹேது என்ற சீரிய பொருளை விளக்கமாக காட்டித்தருவது இந்த அத்யாயம்.

## Dr. V.V. ராமானுஜம்

"தேவுமற்றறியேன்" என்ற இக்கட்டுரைத் தொடரில் இதுவரை. * ஆசாரியர்கள் அனைவரும் முன்னுசரித்த ஆசா ரந்தன்னை—பூருவர்கள் சீர்த்த நிலை தன்னை—அதாவது நமது பூருவாசார்யர்களுடைய சீரிய ஒழுக்கத்தையே சான்றாகக் காட்டி ஆசார்ய வைபவத்தைப் பேசியநுபவித்தோம். "மேலையார் செய்வனகள்" என்றும், "செய்யாதன செய்யோம்" என்றும் காட்டியுள்ளபடியே, நம் பெரியோர் களின் அநுஷ்டானமே நமக்கு வாழ்க்கையில் சிறந்த வழி

காட்டி. அதன்படியே நாமும் நம் சரித்திரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை அதிகமாகச் சொல்ல வேண்டுவதில்லை என்று நம்புகிறேன்.

பொய்யில்லாத நமது மணவாளமாமுனிகள் தமது உபதேச ரத்தினமாலையில் ஸ்ரீவசனபூஷணத்தின் பெருமையையும் அதில் விளக்கப்பட்டுள்ள சாஸ்த்ரார்த்தங்களையும் பத்தொன்பது பாசுரங்களால் (53-71) பரக்கப் பேசியுள்ளார். இவற்றுள் சாஸ்த்ரார்த்தங்களைக் கூறும் (60—70) பதினொறு பாசுரங்களுள் ஏழுபாசுரங்கள் ஆசார்ய வைபவமானவை. அவற்றுள் முதன் முதலாக அமைந்துள்ளது:

**தன்குருவின்தாளிணைகள் தன்னில் அன்பொன்றில்லாதார்**
**அன்பு தன்பால் செய்தாலும் அம்புயைகோன் — இன்பமிகு**
**விண்ணாடு தானளிக்க வேண்டியிரான் ஆதலால்**
**நண்ணார் அவர்கள் திருநாடு**

என்பது, அம்புயைகோனை (திருமகள் கேள்வனை) எம்பெருமான், ஆசார்ய பக்தியில்லாதவர்கள் தன்னிடம் அன்புபூண்டொழுகினும் அவர்களுக்கு நற்பேறு அளிக்க மாட்டான் என்பது இங்கு ஸாரமான பொருளாகும்.

"என் நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி தூமுதல் பத்தர்க்குத் தான் தன்னை சொன்ன என் வாய்முதலப்பன்" என்று நம்மாழ்வார் கொண்டாடும் எம்பெருமான் ஆழ்வார் நாவில இருந்து, "மாறனில் மிக்குமோர் தேவுமுளதே" (தேவு மற்றறியேன்—6) என்று சொல்வித்தது போலவே இங்கு "தன் குருவின் தாளிணைகள் தன்னில்" என்று மாமுனிகள் பாசுரத்தையும் அமைத்துள்ளான். "அன்பு **தன்**பால் செய்தாலும்" என்ற இடத்தில் **தன்** என்ற சொல்லின் பொருளை '**தன்** குருவின்' என்ற இடத்திலும் கொண்டால் இன்சுவையே வடிவான பொருள் கிடைக்கும். எம்பெருமானாரின் அபராவதாரமாய், அவரிடம் ப்ராவண்யமே ஒரு வடிவெடுத்து யதீந்த்ரப்ரவணர் என்றும் **தன்குரு** என்றும் நம்பெருமாள்

போற்றும்படி ஆசார்யத்வ பூர்த்தியுள்ளவரான மணவாளமா முனிகள் திருவடிகளில் அன்புபூண்டு ஒழுகாதவர்களுக்கு உஜ்ஜீவனமே கிடையாது என்பது குன்றிலிட்ட விளக்காக ப்ரகாசிக்கும் பொருளாகும்.

ஸதாசார்ய ஸம்பந்தமுள்ள ஒருவனுக்கு * தேனார்கமலத் திருமாமகள் கொழுநன் தானே வைகுந்தம் தரும் என்றும், தம் தம்முடைய ஆசார்யரிடம் பக்தி உள்ளவர்களுக்கு * பையரவில் மாயன் பரமபதம் கையிலங்கு நெல்லிக்கனி—இது ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம் என்றும் மேல் பாசுரங்களில் சொல்லி, ஆசாரியனைப் பிரியாதிருந்து அவன் முகம்மலரும் படியான கைங்கர்யங்களைச் செய்து வாழ்நாளைப் போக்க வேணும் என்று உபதேசித்து, மிகவும் முக்கியமான ஒரு பொருளை வெளியிடுகிறார் மேலே :

**ஆசாரியன் சிச்சன் ஆருயிரைப் பேணுமவன்**
**தேசாரும் சிச்சனவன் சீர்வடிவை — ஆசையுடன்**
**நோக்குமவ னென்னும் நுண்ணறிவைக் கேட்டுவைத்தும்**
**ஆர்க்கும் அந்நேர் நிற்கையரிதாம்** என்று.

தனக்கு வகுத்த ஆசார்யனை அடைந்துவிட்ட பிறகு தன் ஆத்மோஜ்ஜீவனத்தைக் குறித்து ஒரு பயமுமில்லாமல் அது ஆசார்யனுடைய சுமை என்று இருக்க வேணும். ஆனால் முக்யமான கடமை ஒன்றுண்டு. அது ஆசார்யனுடைய "சீர் வடிவைப்" பேணுமது. அதாவது லௌகிகமான வாழ்க்கையைப் பற்றி ஆசார்யனுக்கு ஒரு கவலையுமில்லாதபடி பார்த்துக் கொள்கை. ஆசார்யன் தன் தேஹயாத்திரையிலும் சிஷ்யன் தன் ஆத்மயாத்ரையிலும் கண்வைப்பது தகாது. மேலும் ஆசார்யனுடைய திருமாளிகை (அல்லது மடம்) தினப்படி விசேஷப்படி நடப்புகளைச் சிஷ்யர்கள் தங்கள் பொறுப்பாய் நடத்திப்போர வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப் படுகிறது. (தொடர்ச்சி 41-ம் பக்கம் பார்க்க)

# கீதாசார்யன் பதில்கள்

சென்னை-88

N. வெங்கடவரதன்

**கே: சென்ற இதழில் ஆணல்லன் என்பது புருஷோத்தமனைக் குறிக்கும் என்கிறார் சாண்டில்யன். ஆண் என்றாலும் புருஷன் என்றாலும் ஒன்றுதானே!**

ப: ஆணல்லன் பெண்ணல்லன் அலியுமல்லன் என்று முப்பாலின் படியுமல்லன் என்று கூறினாலும் அல்லன் என்ற சொல்லில் **ன்** என்ற ஆண்பால் விகுதியே உள்ளது. எனவே அவன் ஆணாகவேயிருக்க வேண்டும். ஆனால் அவன் ஆணல்லன் என்று கூறிவிட்டபடியால் இவ்வுலகில் காண்கிற ஆண்களைப் போல அல்லன்; அவன் ஆண்களுள் உயர்ந்தவன்—உத்தமன். எனவே அது புருஷோத்தமனைக் குறிக்கிறது என்பது உட்கருத்து.

பெங்களூர்-3.

ராஜகோபாலன்

**கே: உலகெங்கும் எம்பெருமான் பரவியிருக்கிறான். ஆனால் அவனை விக்ரகமாக எழுந்தருளப் பண்ணி கோயில்களில் மட்டும் சென்று வணங்குவது ஏன்? இதனால் மற்ற இடங்களில் அவன் இல்லையென்று ஆகாதா?**

ப: உலகில் காற்று இல்லாத இடமே கிடையாது. ஆனாலும் அந்த இயற்கையான காற்று நமக்குப் போராத போது விசிறி (Fan) போன்ற கருவிகள் மூலம் அந்தக் காற்றை அதிகப்படுத்திக் கொள்கிறோம். அதுபோல பகவான் உலகெங்கும் பரவியிருந்தாலும் நம்முடைய ஊனக் கண்களுக்கு அவன் புலனாவதில்லை. எனவே விக்ரகமாக ஓரிடத்தில் எழுந்தருளப் பண்ணி வணங்குவதால் திருப்தி ஏற்படுகிறது.

# திரு நின்ற ஊர்

**தின்னனூர் :** இவ்வூர் சென்னை மாநகருக்கு அருகில் இருக்கிறது. திரு நின்ற ஊர் என்ற சொல் நாளடைவில் மருவித் தின்னனூர் என்று வழங்கப் படுகிறது. இது திருமங்கை யாழ்வாரால் பாடப்பெற்ற திவ்வியதேசப். திருமகள் நிலையாக வாழும் ஊர் என்பதை ஊரின் பெயரே கூறுகிறது. ஊருக்கு அணித்தாய் மிகப் பெரியதோர் ஏரி அமைந்துள்ளது. ஏரியின் கரையில் இராமன் ஸன்னிதி இருக்கிறது இங்கு எழுந்தருளி இருக்கும் இராமனை 'ஏரி காத்த இராமன்' என்று கூறுவார்கள். வருணதீர்த்தம் என்ற பெயரோடு ஒரு குளமும் அமைந்திருக்கிறது. இவ்வூரிலிருக்கும் ஸன்னிதியில் பத்தராவிப் பெருமாள் எழுந்தருளி இருக்கிறார். தாயாரின் பெயர் என்னைப் பெற்ற தாயார் என்பதாகும். இந்த ஸன்னிதி திருமலை–திருப்பதி பெரிய கேள்வி ஜீயர் ஸ்வாமியின் ஆதிக்கத்தில் விளங்கி வருகிறது. திருவாராதனமும் உத்ஸவங்களும் குறைவற நடைபெறும் திவ்ய தேசம் இது.

# ஸ்தலசயனத்துறைவார்

**உடலும் உயிருமானுன் :** பகவான் அடியார்களை உயிராகக் கருதுகிறான். கண்ணன் பாண்டவ தூதனாகத் துரியோதனனின் அவைக்களத்திற்குச் சென்றான். 'பாண்டவர்கள் எனக்கு உயிர் என்பதை 'மம ப்ராணா ஹி பாண்டவா:' என்று வெளிப்படையாகவே கூறினான். ஒவ்வொருவரும் தம்முயிரைப் பாதுகாப்பது போல் பாண்டவர்களைக் காப்பாற்றினான்; அவர்களுக்கு நன்மையே செய்தான்; பாரதப்போர் முடித்து வெற்றியைத் தேடித் தந்தான். 'என்னிடம் அன்பு கொண்டவர்கள் என் உயிர் போன்றவர்கள்' என்பதைச் செயலில் காட்டினான்.

அடியார்கள் எம்பெருமானை உயிராகக் கொண்டவர்கள் இலக்குமணனும் பிராட்டியும் இராமனையே உயிராகக் கருதினார்கள். இராமன் வனத்திற்குச் செல்ல முடிவு செய்தான். தங்களையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று இவர்கள் வேண்டினார்கள். இவ்வேண்டுகோளை ஏற்பதில் இராமன் சிறிது தாமதித்தான் 'இராம! உன்னை விட்டுப் பிரிந்தால் நாங்கள் உயிர் நீங்கியவர்களாக ஆவோம்' என்று இலக்குமணன் கூறினான். தசரதனும் இராமனை உயிராகக் கருதினான். ஆழ்வார் பகவானை 'உயிராய எங்கார்வண்ணனே!' என்கிறார். இவ்வூரிலுள்ள பெருமான் பக்தர்களுக்கு உயிராக இருப்பவன். பெயருக்குப் பொருத்தமானவன்!

தாயே! நீயே என்னைப் பெற்ற தாய்!; தாய் மக்களிடம் அன்பு கொண்டவள்; பாசம் மிக்கவள்! ஒரு பொருளை மிகவும் விரும்பும் போது அதிலுள்ள குற்றம் தோன்றாது. ஒரு பொருளை வெறுக்கும் போது அதிலுள்ள குணம் (நற்பண்பு) தோன்றாது' என்று பெரியோர் கூறுவர். தாய் தம் மக்களிடம் குற்றம் காண மாட்டாள். தன் மகன் குற்றமுள்ளவனாயினும் அவனை நல்லவனாகவே கருதுவாள். அது தான் தாய்ப் பாசம்! ஆயர்பாடிப் பெண்கள் அசோதையிடம் கண்ணன் மீது அடுக்கடுக்காகக் குற்றங்களைச் சாட்டினாலும் அசோதை அவற்றைப் பொருட் படுத்தவில்லையே! தன்மகன் நல்வழியில் செல்லாதவனாயினும் நல்லவர்களைப் போல் நன்மை பெற வேண்டும் என்று நினைப்பவள் தாய்.

மகாலக்ஷ்மியை 'லோக மாதா' உலகத் தாய் என்கிறோம். நாம் அவளை நினையாவிடினும், அவள் நம்மையே நினைக்கிறாள். தாய் என்ற சொல்லுக்கு ஏற்ப 'வாத்ஸல்யம்' கொண்டவள். எல்லோரும் நலமாக வாழ வேண்டும் என்று நினைப்பவள். பகவானிடம் புருஷகாரம் செய்து (சிபாரிசு செய்து) ஒவ்வொருவரையும் உய்விக்க வேண்டும் என்று நினைத்தே இவ்வூரில் (திருநின்றவூரில்) எழுந்தருளி இருக்கிறாள்! பக்தர்களின் ஆவி

யாகிற எம்பெருமான் அடியார்களைக் காப்பதற்கு உறுதி கொண்டுத் தயாராக இருக்கிறான். அவனுக்கு அவ்வாய்ப்பை அளிக்காமல் இவள் மக்களின் முன்வந்து நிற்கிறாள். அச்சம் நீக்கித் தன்னருகில் அழைத்துக் கடாக்ஷிக்கிறாள்; பத்தராவி எம்பெருமானின் அருளைப் பெற்றுத் தருகிறாள். ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்க நாச்சியாரை 'அகில ஜகந்மாதரம்' என்று கூறியும் திருப்தி அடையாமல் 'அஸ்மந் மாதரம்' என்று அருளிச் செய்தார். இவ்வூரிலுள்ள தாயாரும் லோக மாதாவாக இருந்தாலும், 'என்னைப் பெற்ற தாயார்' என்று ஒவ்வொருவரும் அன்போடு கூறிக் கொண்டாடும்படியன்றோ வீற்றிருக்கிறாள்! நீயே என்னைப் பெற்ற தாயார்!

**முன்னவன் பின்னவனானான்:** சென்னைக்கு மிகவும் அருகில் பச்சை வாரணப் பெருமாள் கோவில் (பேட்டை) என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கே அனந்த நாராயண தீக்ஷிதர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஞானமநுட்டானங்களில் சிறந்தவர். பூமி நாச்சியார் என்பவள் இவருடைய மனைவி. பூமி நாச்சியார் ராமாநுஜரின் பெரிய தங்கை. இவர்கள் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். இவருடைய திருவாதாரனப் பெருமாள் இராமன். மக்கட்பேறு இல்லாமையால் வருந்திய இத்தம்பதியர் திருவேங்கடமுடையானை ஸேவித்து, அவனருளால் புத்திர பாக்யத்தைப் பெறநினைத்தனர். திருமலைக்கு (திருப்பதிக்கு) யாத்திரையாகச் சென்றனர். செல்லும் வழியில் ஒருநாள் இரவு இவ்வூரில் (திருநின்றவூரில்) தங்கி இருக்க நேர்ந்தது. ஏரிகாத்த இராமன் ஸந்நிதியில் தங்கினர்.

இராமன் அன்றிரவு அனந்த நாராயணனின் கனவில் தோன்றினார். 'மக்கட்பேறு வேண்டி வேங்கடம் செல்ல வேண்டாம், நாமே உமக்கு மகனாகப் பிறப்போம். என் தம்பி லக்ஷ்மணன் ஸ்ரீபெரும்பூதூரில் பிறந்து இளையாழ்வான் என்ற பெயரோடு விளங்குகிறான். நாம் உமக்கு மகனாகப்

பிறந்து அவனை அடுத்து உலகை உய்விப்போம்' என்று கூறி மறைந்தான் அனந்த நாராயணரும் பேட்டைக்குத் திரும்பினார். கனவு பலித்தது. ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதப் புனர்வஸு நக்ஷத்திரத்தில் சொன்ன சொல் தவறாத இராமன், இளையாழ்வாரின் சகோதரி குமாரனாக அவதரித்து 'முதலியாண்டான்' என்று பெயர் பெற்றார். இவ்வாறு இலக்குமணனுக்கு முன்னவனான இராமன், லக்ஷ்மண முனிக்கு (ராமாநுஜருக்கு)ப் பின்னவனாக ஆனான்.

**நோய் தீர்க்கும் மருந்து :** பரமனைப் போற்றும் குலத்தில் உதித்தாள் ஒரு பெண்! திருநின்றவூர் எம்பெருமானின் குணங்களைப் பக்தர்கள் வாயிலாகக் கேட்டாள். அவனைத் தனக்கு உயிராக நினைத்தாள். அவனோடு கலந்து உறவாட எண்ணினாள். அவ்வாறே நடைபெற்றது. எம்பெருமான் பிரிந்து சென்றான். இவள் கவலையுற்றாள். நெஞ்சு அவனையே நினைத்தது; வாய் அவனையே வெருவியது. உடல் பிரிவாற்றாமையால் வாடியது. கைவளை நெகிழ்ந்தன!

இந்நோய்க்கு மருந்து யாது? இவளை எப்படிக் காப்பது தாய் தந்தையர் திகைத்தனர்! தோழியர் துடித்தனர்! மருத்துவர் நோய் தீர்க்கப் போராடினர். மாந்திரிகர் முணுமுணுத்தனர். நோய் குறையவே இல்லை.

மருந்தும் மருத்துவனும் பரமனே! அவனலன்றி வேறு எவராலும் இந்நோய் தீராது என்று பெண் நினைத்தாள், தோழியை அழைத்தாள் 'தோழீ! ஏன் இந்த வீண் முயற்சிகள்! திருநின்றவூர்ப் பெருமான் பொன்னும் முத்தும் மணியும் போன்றவன். கருடவாகனனான அவனை என்னிடம் அழைத்து

வாருங்கள். அப்போதே என் மனநோய் தீரும்' என்றாள். மையலேற்றி மயக்கும் அழகுடையவன் திருநின்றவூர் நித்திலம்.

**சீரறிந்து தோழிமீர் ! சென்று கொணர்ந் தெனக்குப்**
**போர முலைமுகட்டில் பூட்டுமினோ நேரவுணர்**
**பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னை மாணிக்கத்தை**
**நின்றவூர் நித்திலத்தை நீர்.**

நூற்றெட்டு திருப்பதி. அந்தாதி. 8

———

# காலக்ஷேபத் தொடக்க விழா

இந்த ஆண்டு, பிரதி மாதமும் ஒவ்வொரு ஆழ்வார்களைப் பற்றி வித்வான்களைக் கொண்டு காலக்ஷேபத்தை நடத்த திருவல்லிக்கேணி **திவ்ய தேச மங்களாசாஸன கோஷ்டி** தீர்மானித்துள்ளது. இதன்படி 14-5-79 திங்கட் கிழமை மாலையில் ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதி திருவாய்மொழி மண்டபத்தில் காலக்ஷேபத் தொடக்க விழா நடைபெற்றது. கீதாசாரியன் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீமான் உ. வே. M.A. வேங்கட கிருஷ்ணன் M.A. தலைமை தாங்கினார். வித்வான் சிரோமணி-சொல்வேந்தர். பிள்ளைலோகம் ஸ்ரீ. உ. வே. ஸ்தலசயனத் துறைவார் ஸ்வாமி 'மதுரகவி கவியின்பம்' என்ற தலைப்பில் காலக்ஷேபம் ஸாதித்தார். ஸ்ரீ. உ. வே. வேங்கட கிருஷ்ண பட்டாசாரியர் ஸ்வாமி திவ்யதேச மங்களாசாஸன கோஷ்டியினைப்பற்றி விளக்கினார். தலைவரும், ஸ்ரீபார்த்தஸாரதி ஸன்னிதி நிருவாக அதிகாரி E. பொன்னப்ப பிள்ளை அவர்களும் மங்களாசாஸன கோஷ்டியின் சீரியபணியைப் பாராட்டிப் பேசினார்கள்.

# அன்புள்ள கீதாசார்யரே!

**K. பட்டர் பிரான்** — சென்னை-20

வைகாசி மாதத்திய நம்மாழ்வார் மலர் வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது. பாராட்டுக்கள். மணவாள மாமுனிகள் விஷயமான (Dr. V. V. R.) கட்டுரை தேனினும் இனிது. நம் குரவர் சரித்திரங்களைக் கொண்டு ஆசாரியனின் பெருமையை விளக்கும் இக்கட்டுரைத் தொடர் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இன்றியமையாத தொண்டாகும். இந்தத் தொடருக்காகவே பத்ரிகை வாங்கலாம்.

**ஸம்பத்குமார்** — திருநெல்வேலி,

என்ன ஓய்! ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பகுதியை நிறுத்தி விடுகிறீர். சித்திரை இதழில் ராசி பலனைக் காணோம்; வைகாசி இதழில் ஆசிரியர் பக்கத்தையும் பஞ்சாங்கத்தையும் காணோம். இது எதில் போய் நிற்கும்?

**ராஜகோபாலன்** — பாம்பே

கீதாசார்யனுக்கு எவ்வளவு விலை வைத்தாலும் தகும். உங்கள் வண்ணப்பட அட்டை ஒன்றே ஒரு ரூபாய்க்கு மேல் பெறும். எனவே ஒரு ரூபாய் ஆக்குவதை நான் உளமார வரவேற்கிறேன்.

**மணிவண்ணன்** — செங்கல்பட்டு.

பத்ரிகையின் தரத்தைக் குறிப்பது என்றால் என்ன பொருள் ஐயா? எக்காரணத்தைக் கொண்டும் அதைச் செய்து விடாதீர்கள். வண்ண அட்டையும் உள்ளே வெள்ளைத் தாள்களும் கண்ணைக் கவருகின்றன. எக்காரணத்தைக் கொண்டும் அவைகளை மாற்றி விடாதீர்கள். விலை அதிகமானாலும் பரவாயில்லை.

# நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்

## பேராசிரியர் T. வைத்தமாநிதி

எவ்வுயிர்க்கும் தாயான இறைவனைக் குழந்தையாக்கித் தன்னைத் தாயாக்கி பக்தி செலுத்தி, தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடித் தந்தார் பெரியாழ்வார். அவருக்கு இறைவனைக் குழந்தையாகப் பாவிப்பதற்கு மிக எளிதாக இறைவன் கண்ணனாகத் தோன்றி விளையாடிய விளையாடல்கள் துணை நின்றன. கண்ணனின் குழந்தைப் பருவத்துப் பல நிலைகளை தாம் தாயாகி நின்று பார்த்து மகிழ்ந்து பக்திச்சுவை நனி சொட்ட, அப்பாடல்களில் தம் இதயத்தையே கொட்டுகின்றார். பிள்ளைத்தமிழ் என்ற அருமையான இலக்கியப் பாவகை தோன்ற, அவையே அடித்தலமாயின. கண்ணனையும், முருகனையும் இப்படி பிள்ளைமைத்தத்துவமாகப் பார்த்து பிள்ளைத் தமிழ்கள் பாடி மகிழ்ந்த புலவோர் பலர். தாம் தாம் போற்றும் தெய்வத்தையும், ஆசாரியரையும் குழந்தையாக்கி பிள்ளைத்தமிழ் பாடி தம் பக்தியையும், காதலையும் வெளிப் படுத்தியுள்ளார் புலவோர். அவற்றுள்ளே நம்மாழ்வார் பிள்ளைத் தமிழினுக்குத் தனிச் சிறப்புளது. ஒரு கவிஞர் நம்மாழ்வாரைக் குழந்தையாக்கித் தன்னைத் தாயாக்கிப் பாடியுள்ள பாடல்களே நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ் ஆகும். இப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர் நானூறு, ஐந்நூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்ததாக ஆழ்வார் திருநகரியில் வழக்கில் செவி வழிச் செய்தியுள்ளது. இவ்வாசிரியர் பெயரும் தெரியவில்லை; காலத்தைப் பற்றியும் திட்டமாக ஒன்றும் தெரியவில்லை.

பழைய ஏட்டுப் பிரதி ஒன்றிலிருந்து பெயர்த்தெழுதி அச்சேற்றி, ஆழ்வார் திருநகரி திருஞானமூர்த்திக் கோவைப் பதிப்பாசிரியரும், சிறப்பு வாய்ந்த கப்பராயாயண பதிப்பாசிரி

யருமான பெரியன் அவர்கள் 1946ல் வெளியிட்டுள்ள பிரதி ஒன்று தான் உள்ளது.

இந்நூலாசிரியருக்கு நம்மாழ்வாரிடம் கரை காணுக்காதல் உள்ளது என்பதையும், மிகச் சிறந்த பக்தியின் வெளிப்பாடாக அச்சுவை இவரது நூலிலே மலர்ந்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது. சங்க காலந்தொட்டு தம் காலம் வரையுள்ள தமிழ் நூல்களிலும், வேத உபநிடதங்களிலும் வேறு பல சமய நூல்களிலும் இவ்வாசிரியருக்குச் சிறந்த புலமையிருப்பதை இந்நூல் புலப்படுத்துகின்றது.

பொதுவாக பிள்ளைத்தமிழ் பாடுவோர் பத்துப் பருவங்களில் தலைவன் அல்லது தலைவியின் சிறப்புக்களைப் பாடுவார்கள். அத்தலைவன் அல்லது தலைவியின் அசாதாரணச் செயல்களையெல்லாம் அவரது பிள்ளைமைப் பருவத்து நிலைகளைப் பாடும் முகத்தான் கற்பித்துப் பாடுவார்கள். நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ் பாடும் ஆசிரியருக்கு இதற்கெல்லாம் அவசியமிருக்க வில்லை. அவர் பாடுவதோ நம்மாழ்வார் என்ற தெய்வக் குழந்தையையே. அது ஆற்றிய அருஞ்செயல்களோ பிள்ளைமைப் பருவ நிலையிலேயே ! இந்த மதலையின் அசாதாரணத் தன்மையும் அதனால் வெளிப்படும் இறைமையுமே இவருக்குப் பாட்டுடைப் பொருளாகும்.

பாட்டுடைத் தலைவனாக அமையும் குழந்தையைக் காக்க வேண்டித் திருமால் தொடங்கி பல கடவுளரை காப்புச் செய்யுள்களில் வேண்டுவது பிள்ளைத்தமிழ் மரபு.

இக்கவிஞர் காப்புச் செய்யுள் தருவதிலே அவரது சமய மரபையே பின்பற்றுகிறார். அச்சமய மரபு ஆசாரியன் வழியாக இறைவனைச் சேர்தல். ஆகவே மாறனாகிய நம்மாழ்வாரைக் காக்க வேண்டும் காப்புச் செய்யுளை மாறனடி பணிந்து

உய்ந்தவரான இராமாநுஜருக்கே தருகிறார். உடன் நூல் தொடங்கி விடுகின்றது. பத்துப் பருவங்களில் நூறு பாடல்கள் தரப்படுகின்றன. தனியாக வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் முடிவில் உள்ளது. எல்லாம் கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்கள் தானென்றாலும், சந்தங்களில் பல வேறுபாடு சமைத்து, நல்ல சுவையை மாறி மாறித் தருவதைப் பார்க்கிறோம். கூவிள வாய்பாட்டில் முடியும் சந்தங்களை இவ்விருத்தங்களில் காணலாம். இப்பிள்ளைத்தமிழின் பாட்டுடைத்தலைவரான நம்மாழ்வாருக்கு கிருஷ்ணாவதாரத்திலே எவ்வளவு ஈடுபாடோ அவ்வளவு ஈடுபாடு இக்கவிஞருக்கும் இருக்கின்றது. ஒரே ஒரு சான்று பார்ப்போம்.

விழிக்கட் பொங்கழல் கக்கும் சினத்து உக்ரம் தெவிட்டிக் கொண்டு
எயிறு முறுகிய பாந்தளைக் கீழ்ப்பட
மிதித்துத்தன் கிருபைக்கட் பங்கயத்தைக் கொண்டு இரட்சிக்குந்
தருண வருண பதாம்புயக் கூத்தினர்
தெழித்துச் செந்தயிர்க் கட்டுண்டுரற் கட்டுண்டு அழக்கற்கும்
குழவி, மதமுது தூங்கலைக் காத்தவர்.

என்று பாடுகிறார்.

இங்கே கண்ணனது காளிங்க நர்த்தனக் காட்சியை நம் மனக்கண்முன் கொண்டு வருகிறார். இப்படிப் பாம்புத் தலைமேலே நடஞ் செய்யும் பதாம்புயக் கூத்தினர், கோபியரின் வீடுகளில் புகுந்து தேர்ந்து தயிர் உண்டு பிறகு கண்டுபிடிக்கப் பட்டபோது தயிர் கடையும் மத்தைச் சுற்றும் கயிற்றினால் கட்டுண்டவராயிற்றே! இந்த எளிவந்த தன்மையைத்தானே இளங்கோவடிகளும் கடல் வயிறு கலக்கிய பேராற்றல்

‹யசோதயார் கடை கயிற்ருல் கட்டுண்ண கை' என்று பாடி வியந்தார். 'கண்ணி நுண் சிறுத் தாம்பிஞல் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்' என்று தானே ஆழ்வாரைப் போற்ற வந்த மதுரகவி பாடினுர். இக் கவிஞரும் அதையெல்லாம் நினைவுபடுத்துகிருர். பிறர்களுக்கரிய வித்தகஞன கண்ணன் பத்துடை யடியவர்க்கு எவ்வளவு எளியவஞக வருகின்ருன் என்று நம்மாழ்வார் வியக்கின்ருரே. அதை மனங் கொள் கிருர்

**'மத்துறு கடை வெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு**
**எத்திறம் உரலிஞேடிணைந் திருந்தேங்கிய எளிவே''**

என்று நம்மாழ்வார் வியப்பது போலவே இ வ ரு ம் தம் வியப்பைக் காட்டுகிருர். அங்கே ஒரு நயமான கற்பனையை யும் சேர்க்கிருர். யசோதை தாம்புக் கயிற்ருல் கட்டவோ அடிக்கவோ நோக்கும்போது, அஞ்சுவதுபோல நோக்கும் கண்ணனது நோக்கையும், அழுகையையும் காட்டும் பாவத்தை ' அழக்கற்கும்' என்று இந்தக் கவிஞர் குறிப்பிடு கிருர். எப்போதும் ஆனந்த மயமாக இருக்கும் பேரருளான இறைத்தத்துவம் உரலிடை யாப்புண்டு அழக்கற்றுக் கொள் கிறதாம்! அதனுல் அழமுடியுமா? அதற்கு அழத் தெரி யுமா? இதென்ன புதுமையான கள்ளத்தனம்! என்ற பாவ மும் சேர்கிறது இந்த நயத்தில்.

இனிச் சிற்றில் பருவத்தில் ஒரு பாடலைப் பார்ப்போம். இளம் நங்கையர் பிள்ளைமைப் பருவத்தில் ஆற்று மணலில் அல்லது வீட்டு முன்னர் மணல் கொணர்ந்து சிற்றில் வீடு கட்டி விளையாடும் வழக்கத்தை அறிவோம். இப்படிப்பட்ட சிறுமியர் சிலரையும் அவர்கள் விளையாடும் மாலை நேரத்தை யும் கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது காரிமாறன் என்ற இந்தச் சிறுவன்

வந்து, வந்து சிதைக்கின்றான், சிறுமியர் அவனிடம் கேட்கிறார்கள் !

'உத்தம ஞானம் விளைந்து கனிந்து அதில்
ஒளிவிடும் ஒண் சுடரே
உயர்வற உயர் நலம் என முதல் அருளிய
உன் தகைமையின் நெறியா இது ?

பற்றுடை அடியவர்க்கு எளியவன் இறைவன், அப்படிப்பட்ட பற்றுடையவர்க்காக உரலினோடு இணைந்த இழிவு எத்திறம்! என்று வியந்தாயே? உயர்வு எது. பற்று எது, என்று தெரிந்த 'பத்திமையின் தகவோ உன் செய்கை? எங்கள் சிற்றிலை இப்படிச் சிதைக்கலாமோ ? என்கிறார்.

இவ்வாறு சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்த இப்பிள்ளைத்தமிழ் அனைவரும் கற்க வேண்டிய ஒரு நூலாகும்.

———

With best wishes of :

**UDIPI HOME**

**BOARDING AND LODGING**

**(Near Egmore Automatic Signal Light)**

Telephone :
842083 (10 Lines)

Telegram :
"UDIPIHOME"

EGMORE — MADRAS-600 008

# பெரியாழ்வார் எதனால் பெரியாழ்வார்?

ஆழ்வார்களில் ஒருவரைப் பெரியாழ்வாரென்கிறோம்; அவருடைய நிஜமான திருநாமம் விஷ்ணுசித்தரென்றும் பட்ட நாதரென்றும் சொல்லப்படுகிறது. பெரியாழ்வாரென்கிற திருநாமம் எதனால் அவர்க்கு ஆயிற்று? ஆழ்வார்களுள் அவர் மூத்தவருமல்லர்; நம்மாழ்வார் திருமங்கையாழ்வாரைப் போலே ஆயிரக்கணக்கான பாசுரங்களைப் பாடினவருமல்லர். பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையையன் அருள் மாறன் சேரலர்கோன் துய்யபட்டநாதனென்று ஆழ்வார்களின் திருவவதாரக்ரமத்தில் இவ்வாழ்வார் ஏழாமவர்; ஆகவே பிராயத்தினால் பெரியவரல்லர்; இவர் அருளிச்செய்த பாசுரங்கள் நானூற்றுச் சொச்சம் பாசுரங்களே யாதலால் ஆயிரக்கணக்கான பாசுரங்கள் பாடினவருமல்லர்; அப்படி

P. B. அண்ணங்கராசாரியர்

இருக்க, எதனால் இவரைப் பெரியாழ்வாரென்கிறது? என்னில்; இதற்கு உரிய ஸமாதானம் உபதேசரத்தினமாலையில் "மங்களாசாசனத்தில் மற்றுள்ளவாழ்வார்கள், தங்கள் ஆர்வத்தளவு தானன்றிப்—பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வா ரென்னும் பெயர்" என்கிற பாசுரத்தில் வெளிவந்துள்ளது. எம்பெருமானைக் கண்டவாறே அவனிடத்துத் தமக்கொரு நன்மையைக் கோலாமல் அவன் அபாயமொன்றுமின்றி வாழ்ந்திருப்பதையே தமக்கொரு நன்மையாகக் கொண்டு பல்லாண்டு பாடினபெருமை இவர்க்குமட்டுமே அஸாதாரணமாக இவரு

டைய சரிதையில் காண்பதனுல் இதையிட்டு இவர் பெரியாழ்வாரெனப்பட்டார். பெரியாழ்வாரென்கிற திருநாமத்திற்கு கீழே விவரித்த நிர்வாஹம் தவிர வேருெரு நிர்வாஹமுமுண்டு வேதாந்த வாசிரியர் கோதாஸ்துதியில் ***தாதஸ் து தே மதுபித:** என்கிற சுலோகத்தில் ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை நித்யமும் எம்பெருமானுக்கு உபஹரித்து வந்ததனுல் பெரியாழ்வார் என்கிற திருநாமம் பெற்ருர் என்று கூறியுள்ளார்; "த்வந்மௌலிகந்த ஸுபகாம் உபஹ்ருத்ய மாலாம் லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம்" என்பது அந்த ஸ்ரீஸூக்தி. இதில் **மஹத்தரபத**மென்றது பெரியாழ்வாரென்பதை நோக்கியே. இப்படியும் ஒரு நிர்வாஹமுண்டு.


With compliments from

# J. M. BAXI & CO.

★

2/21, NORTH BEACH ROAD
MADRAS - 600 001.

Phone: 20016 4 (lines)
Telex : 626 & 416

Post Box
Cobles: "BAXICO"

# திருவாய்மொழிக் குறள்

(ஒவ்வொரு பத்தின் சாரத்தையும் ஒரு குறளில் விளக்குகிறார்)

## ஸௌப்யன்

### 1. பரன்

பரன்படி பாடிப் பரந்தாமன் பற்றே
பரக்கப் பணித்தாரெம் மாறன்.

### 2. காரணன்

காரணனே கேசவன் கிட்டிக் கலக்கவெனப்
பாரறிய ஆய்ந்தார் பரிந்து

### 3. வியாபகன்

யாங்குநிறை மாலுக்கு ஏன்றடிமை செய்யென்றார்
ஓங்குமலை வேங்கடத்தை உன்னி.

### 4. நியந்தா

நாயகன் நானிலத்தில் நாரணனே என்றுரே
ஆயமறை எல்லாம் அறிந்து.

### 5. காருணிகன்

கருணைக் கடற்கண்ணன் பேரருள் பெய்ய
உருகி உரைத்தார் முனி.

## 6. சரண்யன்

சரணவன்தன் தாளிணைக்காத் தூதுவிட்டுக்கூவி
அருண்மாறன் சேர்ந்தார் அடி.

## 7. சக்தன்

எல்லாம் இயக்குவிக்கும் எம்பிரான் பேரழகைச்
சொல்லாரப் பாடினர் தோய்ந்து.

## 8. சத்யகாமன்

பத்தர்க்கே உற்றவனும் பாங்குடை மால்கலந்தார்
கொத்தடியார் கூடுசட கோபன்.

## 9. ஆபத்ஸகன்

இடர்கடிந் தாட்கொளவே ஏங்கி யழைத்தார்
அடுதுயர் உற்றமகிழ் மாறன்

## 10. ஆர்த்திஹரன்

வழித்துணையாய் வாவென்ன மால்தாள் நயந்தான்
மூழுமையுற் றூர்ந்தார் முனி.

# நம்மாழ்வார் பெருமை

## ஸ்ரீரங்கம் குண்டலம் R. திருமலாசாரியர்

எம்பெருமானுடைய திவ்ய மங்கள குணகணங்களாகிய அமுத வெள்ளத்திலே மூழ்கி, மிகவும் ஈடுபட்டு நன்ருக ஆழ்ந்திடுபவராதல் பற்றி ஆழ்வார்கள் என்று பெயர் பெற்ற பரம பாகவதர்களில் பிரதானமானவரை ஆழ்வார் என்ற சிறப்புப் பெயராலேயே வழங்குகிருேம். வெவ்வேறு மதங்களில் அந்தந்த மதத்திற்குரிய தெய்வத்தை வணங்குதல் முதலாகக் கூறப்பட்ட முக்தி மார்க்கங்களெல்லாம் பூர்வ பக்ஷமாய் மறுக்கப்பட்டு தலைகாட்டா தொழிய, திருமாலை வழிபடுதல் ஒன்றே முக்தி மார்க்கம் என்று ஆழ்வார் ஸித்தாந்தம் செய்து நிலை நிறுத்தியுள்ளார். இதற்காக இவர் சகல வேத சாஸ்திரங்களுக்கும் சம்மதமாய் சிறந்த வேதாந்தப் பொருளையே அறிவுடையாரனைவரும் அங்கீகரிக்குமாறு ஆயிரமின் தமிழால் "திருவாய்மொழி" என்கிற திவ்ய பிரபந்தத்தை உலகுக்கு அளித்திருக்கிருர். எம்பெருமானுடைய ஐவகை நிலைகளுள் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமித்வம் என்ற நான்கிற்கும் முறையே வேதம், பாஞ்சராத்ரம், இதிஹாஸம், ஸ்ம்ருதி என்பன போல அர்ச்சாவதாரத்திற்கு ஏற்ற துதி திருவாய்மொழி ஆகிய திவ்யப் பிரபந்தங்களேயாம். இவ்வாழ்வார், கடல் கடைந்து அமுதம் எடுப்பார்போல், அளவிறந்த வேதங்களின் சுவையை உணர்ந்து "கண்ணன் அல்லால் தெய்வமில்லை" "அத்தெய்வ நாயகன்தானே" என்று ஐயம் திரிபறத் தெளியச் சொல்லி பரம்பொருளைப் பிடித்துக் காட்டிக் கொடுக்கிருர். யாவர்க்குந் தலைவனும், ஸ்ரீரங்கத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருப்பவனுமான ஸ்ரீரங்கநாதனையே, இவ்வேற்றம் கொண்டு "நம் பெருமாள்" என அன்புடையோர் கூறுவர். "வான் திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ் மேல்,

ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும்—ஈன்ற முதல் தாய் சட கோபன் என பின்புள்ளார் கூறியதும் காண்க. அந்த நம் பெருமாளும் திருவாய்மொழி ஆயிரம் பாசுரத்தில் கூறிய ஸாரார்த்தத்தின் ஒரு பகுதி அளவும், அளவிறந்த அரிய பெரிய பல வேதங்களும் கீதையும் சொல்லவில்லை என்று உணர்ந்து இத் தென்மொழி வேதமே உலகுய்யச் சாலச் சிறந் தது என்று களிப்படைகிறார். "ஓர் ஆத்மாவுக்கு ஹிதாம்சத் திற்கு ஒரு பாட்டே அமையும்படியிறே இவர் பாடிற்று" என்பர் ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளையும்.

ஒரு பாசுரம் கேளீர் :

**"கண்ணன் கழலிணை, நண்ணும் மனமுடையீர்,**
**எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே"**

இத்திருவாய்மொழி விளக்கமாவது : "ஸ்ரீ ராமாவ தாரத்திலும் ஓர் ஊரேயிறே திருந்தியது. இவ்வாழ்வார் பிறப்பிலே இந்த ஸம்ஸாரமே — உலகமே — திருந்தியது" என்பதாம். இப்படிப்பட்ட பெருமையையுடைய ஆழ்வாரை யும், அவர் திருவாய்மொழியை விளக்கி பிரசாரம் செய்த மஹான்களின் பெருமையையும் உணர்ந்து நன்றிப் பெருக் கால் நம்பெருமாளும் இவர்களை "நம்மாழ்வார், நஞ்சீயர், நம் பிள்ளை" என்றே அபிமானித்துப் பேசினர். "நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்சீயர், நம்பிள்ளை, யென்பர் அவரவர்தம் ஏற்றத்தால்" என்ற உபதேசரத்தின மாலையையும் காண்க. "நம் சடகோபனைப் பாடினையோ என்று நம் பெருமாள் விஞ்சிய ஆதரத்தாற் கேட்ப" என்று பின்புள்ளாரும் கொண் டாடும்படி, இவர் நம்பெருமாளால் "நம் ஆழ்வார்" என்றபி மானிக்கப் பெற்றார்.

வடமொழி வேதமும் பரமாத்மாவினுடைய ஸ்வரூ பத்தை நாடிச் சொல்ல ஆரம்பித்து, முடிவில் தனக்கு எட்ட

வில்லை யென்றே மீண்ட தென்பது அவ்வேதத்திலேயே காணலம். "यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह" என்பதில். இதற்கு அறிகுறியாக கோயில்களில் திருவிழாக்களில் பகவானின் பின்னே வேத பாராயணம் செய்யப்பட்டு வருவதை இன்றும் காணலாம். ஆனால் ஆழ்வாரருளிச் செயல்கள் பகவானுடைய ஸ்வரூபத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு உணர்த்துவதால் பகவானுக்கு முன்னே ஓதப்படுவதைப் பார்க்கலாம் இதைக் காணுங்கால் ஆழ்வாரவதரித்த பின், அனைவரும் "திருமகள் கொழுநனை தலைவன் நாராயணனுக்கே இச்சேதனன் தொண்டன்" என்ற முக்கியமான உண்மையை உணர்கின்றனர் என்பதைக் கண்டு, பகவானும், எல்லையில்லா ஆனந்தமடைகிறான் என்பது புலனாகும். இதுதான் தொன்மையான வைஷ்ணவ சமயத்தின் உண்மையுமாகும்.

PHONE: 442407
VUMMIDI
Bangaru Chetty Trust
JEWELLERS and DIAMOND MERCHANTS
vbc
PANAGAI PARK
MADRAS - 600 017

# திருவாய்மொழியும் த்வயமும்

த்வயத்தில் பூர்வ வாக்யத்தில் இரண்டாவது பதம் சரணம் என்பதாகும். அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் தப்பாத உபாயம் என்பது இதன் பொருளாகும். இவ்வர்த்தத்தை ஆழ்வார் திருவாய்மொழி நான்காம்பத்தில் பல பாசுரங்களால் அருளிச் செய்துள்ளார். அப்பாசுரங்களை பிள்ளை உலகாரியர் ஸாரஸங்க்ரஹத்திலே தொகுத்தருளிச் செய்துள்ளார். அப்பாசுரங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் இனி அநுபவிக்கலாம்.

1) "கொம்புபோல் சீதை பொருட்டு இலங்கைநகர் அம்பெரியுய்த்தவர்" (4-2-8). கொம்புபோல் – வஞ்சிக் கொம்புபோலே அபிரூபையாய், சீதை பொருட்டு–அயோநிஜையான ஸ்ரீ ஜநகராஜன் திருமகளுக்காக, இலங்கைநகர் – லங்கா நகரத்திலே, அம்பு எரி—சராக்நியை, உய்த்தவர்-

**வேளுக்குடி K. வரதாசாரியர்**

ப்ரவேசித்தவர் என்பது வாதிகேஸரி ஜீயருடைய உரையாகும். இப்பாட்டிலுள்ள கொம்பு என்ற ஶப்தத்திற்கு வஞ்சிக் கொம்பு என்றும், மரத்தில் ஏகதேசமான கொம்பு என்றும் இருவகையாகப் பொருள் கொண்டு நம்பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் இருவகையாக வ்யாக்யாநித்துள்ளார்கள். வஞ்சிக் கொம்புபோல யென்னுதல்-அநந்யா என்கிறபடியே ஏகவஸ்துவில் ஏகதேசம் என்னுதல் என்பது ஈடு. இலங்கை நகர்—சந்த்ராதித்யர்கள் ஸஞ்சரிக்க பயப்படும் ஊர். கலியன் திருவெழு கூற்றிருக்கையில் "இருசுடர் மீதினில் இயங்கா" என்றருளிச் செய்திருப்பது கொண்டு இவ்வாறு

வ்யாக்யாநித்துள்ளார் நம்பிள்ளை. அவ்வூரிலே சராக்நியை ப்ரவேசிக்க விட்டான் சக்ரவர்த்தித் திருமகன் என்றபடி. இத்தால் ஸ்ரீ ஜநகராஜன் திருமகள் விரோதியைப் போக்கின படி. அநிஷ்ட நிவ்ருத்திக்குத் தப்பாத உபாய பூதன் பகவான் என்றபடி.

2) வல்வினை தீர்க்கும் கண்ணனை - தொல்வினை தீர - (4-4-11)—வல் - ஆச்ரிதர் தன்னை ஸம்ஶ்லேஷிக்கைக்கு விலக்கான, வினை-ஸகல பாபங்களையும். தீர்க்கும்-ஸர்வபா பேப்ய: மோக்ஷயிஷ்யாமி என்று போக்கும் ஸ்வபாவனான கண்ணன் என்பது பதவுரை. மண்ணையிருந்து துழாவி பதிகம் தாய்ப்பாசுரமாக அமைந்துள்ளது. "என்பேதைக்கு என் செய்கேன் வல்வினையேனே" இது தாய்ப்பாசுரத்தின் முடிவாகும். இவளை இப்படிக் காணும்படி மஹாபாபத்தைப் பண்ணினேன். ஆழ்வான் திருநயநங்கள் நோவுபட்டபின்பு எம்பெருமானார் திருவுள்ளம் நோவு பட்டாற்போலே காணும், திருத்தாயார் திருவுள்ளமும் படுகிறது என்பது ஈட்டு திவ்ய ஸூக்தியாகும்.

இப்படித் தாயார் கைவிட்டவாறே பகவான் ஆழ்வார் விஷயத்தில் எப்படியானான் என்பதனைத் தெரிவிக்கும் பாசுரம் "வல்வினை தீர்க்கும் கண்ணனை" என்பது. பெற்றவர்கள் கைவிட்டால் பிடித்தவர்கள் கைவிடார்களே என்பது ஈடு. பெற்ற தாயார் என்செய்கேன் என்று கைவிட்டாலும் பெண் பிள்ளையைக் கைப்பிடித்த அழகிய மணவாளன் கைவிடான், வல்வினை தீர்த்தான் என்றருளிச் செய்கிறார்—அதாவது பெண் பிள்ளைக்கு அநிஷ்ட நிவர்த்தகன் மணவாளனே என்கிறார். இதனாலும் சரண ஶப்தார்த்தம் கூறப்பட்டது.

3) "வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்துவீய" (4-5-2). வெய்ய-பரிதாப ஹேதுவாயிருக்கிற, நோய்கள்

முழுதும்-அவித்யா கர்ம வாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களான ஸமஸ்தக்லேசங்களும், வீய—நசிக்கும்படியாக. என்று பதவுரை. இதுவும் அநிஷ்ட நிவ்ருத்தியைக் கூறும் பாசுரமாகும்.

4) "மேவிநின்று தொழுவார் வினைபோக". மேவி-அநந்யப்ரயோஜநராய்க் கலந்து, நின்று-நிலைநின்று, தொழுவார்-அநுபவிப்பாருடைய, வினை-அநுபவவிரோதி பாபங்கள், போக-நசிக்கும்படி. என்பது பதவுரை. மேவி நின்று தொழுவார்-கிட்டக் கொண்டு "தேஹிமே ததாமிதே" என்று ப்ரயோஜநாந்தரத்துக்கு மடியேற்றுக் கொண்டு போகையன்றிக்கே "வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார்" என்கிற படியே அவன்றன்னையே ப்ரயோஜநமாகக் கொண்டு தொழுமவர்கள். "இன்று வந்தித்தனையும் அமுதி செய்திடப் பெறில்" என்று தொழுமவர்கள் என்றிறே ஈட்டுதிவ்யஸூக்தி. வினை போக-ப்ரயோஜநாந்தரத்திலே நெஞ்சு செல்லுகைக்கடியான பாபங்கள் போம்படியாக என்று ஈடு. பகவதலாபமாகிற துஃக்கம்போம்படி என்று இருபத்து நாலாயிரம். இத்தாலும் அநிஷ்ட நிவர்த்தகத்வம கூறப்பட்டது.

5) "பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்—பிறப்பது சாவதாய் நின்று அலமருகிற அறிவுகேடு தீர்ந்துவிட்டேனித்தனை - என்று பதவுரை. நிரஸ்த ஸாம்ஸாரிகதுஃக்கனுனேன் என்பது ஒன்பதினாயிரம். இத்தாலும் அநிஷ்ட நிவ்ருத்தி கூறப்பட்டது.

6) "நோயே மூப்பு பிறப்பு இறப்பு பிணியே என்றிவையொழிய"—சரீரத்து வந்தவற்றுக்கு சரீரியான ஆத்மா ஸுகித்தல் துஃகித்தல் செய்யுமோபாதி எனக்கு வந்தவற்றுக்கு ஸுகித்தல் துஃகித்தல் செய்வாய் நீயாம்படி ஸம்பந்தமுண்டாயிருந்த

பின்பு ஜந்மநிபந்தநமான இவ் வ்யஸநங்களைக் கழித்து- நோயும் பிணியுமென்று ஆதிவ்யாதிகள் என்பது ஈடு- இதனாலும் அநிஷ்ட நிவ்ருத்தி கூறப்பட்டது.

7) "வேட்கையெல்லாம் விடுத்து - கூட்டரிய-திருவடிக் கள் கூட்டினை" (4-9-9) ஆழ்வார் தம்முடைய பூர்வ வ்ருத்தம் கூறுகிறார்—"வேட்கையெல்லாம்" என்று. எனக்கு உன்னை யொழிந்தமையாமித்தனையன்றோ ஆசைப்படுகைக்கு. உன் விபூதியில் நான் "எனக்கு எனக்கு" என்னுததுண்டோ? யாதானும் பற்றி நீங்கும் விரதம் என்று ஈட்டில் ஆழ்வா ருடைய பூர்வவ்ருத்தம் விஸ்தரேண கூறப்பட்டது. இதிறே அநிஷ்டம்- அதினுடைய நிவ்ருத்தி கூறப்பட்டது. "விடுத்து" என்று இஷ்ட ப்ராப்தி கூறப்படுகிறது. "கூட்டரிய திருவடிக் கள் கூட்டினை" என்று. யாவர் சிலர்க்கும் தந்தாமால் சேர்த் துக் கொள்ளவரிய திருவடிகளை நான் சேரும்படி என்னை சேர்த்துக் கொண்டாய் என்று ஈடு. இப்படி இஷ்டப்ராப்தி கூறப்பட்டது. இப்படிப்பட்ட அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் தப்பாத உபாயம் சரண ஙாப்தார்த்தம். இது தன்னை ஆழ்வார் "அஃதே உய்யப் புகுமாறு" (4-1-11) என்றும் "உய்வுபாயம் மற்றின்மைதேறி" (4-3-11) என்றும் அருளிச் செய்தார். "திருநாரணன் தாள்" என்று நான் சொன்ன அதுவே ஆத்மாவுக்கு உஜ்ஜீவிக்கைக்கு உபாயம் என்றருளிச் செய்கிறார் நம்பிள்ளை. உய்வுபாயம்-உஜ்ஜீவநோபாயம், மற்று இன்மை-வேறு இல்லாமையை, தேறி-அறுதியிட்டு என்று பதவுரை. ஆக அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் தப்பாத உபாயமாம் சரண ஙாப்தார்த்தத்தை ஆழ்வார் நான்காம்பத்தால் அநுஸந்தித்தருளினார் என்று ஸாரஸங்க்ரஹம் கூறுகிறது.

# எங்கள் சாளக்கிராம யாத்திரை

## R. K. ஸ்ரீனிவாஸாசாரி M. A.

"இவ்வுலகில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தை நீ எனக்குக் காட்டுவாயா ?" என்று ஒரு நாத்திகன் ஆத்திகனைப் பார்த்துக் கேட்டானும். "ஆகா ! தாராளமாகச் சொல்லுகிறேன். ஆனால் அதற்குமுன் நீ பகவான் இல்லாத இடத்தை எனக்குக் காட்டுவாயா" என்று அந்த ஆத்திகன் கேட்டானும். இதனால் எம்பெருமான் எங்கும் பரவி உள்ளான் என்று புலனாகிறது. அவன் ஸ்ரீவைகுண்டத்திலும், திருப்பாற் கடலிலும் எழுந்தருளியிருக்கிறான். ராமன் கண்ணன்போன்ற அவதாரங்களைச் செய்கிறான். இவை நம் கண்ணுக்கு புலப் படாமல் வெகுதூரத்திலுள்ளதால் நம்மால் ஸேவிக்க முடிவ தில்லை. ராமன், கண்ணன் போன்ற அவதாரங்கள் வெகு காலத்திற்கு முன்பே நிகழ்ந்து விட்டபடியால் அவற்றையும் நாம் காணமுடிவதில்லை. இவை வெள்ளம் வந்த ஆறுகள் போல் வந்த சுவடுகூட இல்லாமல் மறைந்து விட்டன. எனவே நமக்குப் பயன்படவில்லை. எம்பெருமான் எல்லா உயிர் களிலும் எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி இருக்கிறான். நம் கண்ணுக்குப் புலப்படாமல். எனவே இவையும் நமக்குப் பயன்படுவதில்லை. பின் எப்படித்தான் இறைவனை நாம் காண்பது — வணங்குவது ? அதற்காகவே எம்பெருமான் கோயில் களில் எழுந்தருளியிருக்கிறான். ஆற்று வெள்ளம் சில மடுக்களில் தேங்கி பின்புள்ளவர்களுக்குப் பயன்படுவது போல எம்பெருமானுடைய இந்த நிலையே எல்லோருக்கும் பயன்படு கிறது. இப்படி எம்பெருமான் கோயில் கொண்டுள்ள இடங் கள் எத்தனையென்று கணக்கிட முடியுமா ? முடியாது. ஆனால் அப்படிப்பட்ட திருத்தலங்களுள் ஆழ்வார்களால் பாடப் பெற்ற பாக்கியம் பெற்ற தலங்கள் மட்டும் 108. அவை திவ்யதேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில்

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஸ்ரீவைகுண்டமும், திருப்பாற்கடலும் நம் கண்ணுக்குப் புலப்படாதவை. (இதே பெயரில் சில ஊர்கள் இருப்பது வேறு விஷயம்). மீதி 106 திவ்யதேசங்களை நான் ஸேவித்திருக்கிறேன், ஆனல் ஒரே ஒரு திவ்யதேசத்தை மட்டும் நான் இதுவரை சேவிக்கவில்லை. அதற்கு ஏற்ற வாய்ப்பு இதுவரை ஏற்படாததே காரணம். **சாளக்கிராமம்** என்ற திவ்யதேசமே அது. அது வடக்கே நேபாளத்தில் காட்மண்டுவையும் தாண்டி உள்ளது. ஆனல் போவது மிகவும் கஷ்டம் என்று அனைவரும் கூறியபடியால் அந்த திவ்யதேசத்திற்குப் போக முடியாமலே இருந்தது.

1967ல் நானும் ஸ்ரீ உ. வே. வித்வான் வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமியும் அவர் குடும்பமும் வடதேச யாத்திரை சென்றிருந்தோம். நேபாளத்தில் காட்மண்டு வரையில் சென்றிருந்தோம்; கண்டகிநதியில் நீராடினேம். அருகில் "நாராயணகாட்" என்ெருரு கோயில் இருக்கிறது. அதையே சாளக்கிராமம் என்று நினைத்து சேவித்தோம். பின்னர் அது சாளக்கிராமம் அல்ல என்று தெரிந்தபோது எங்களுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. மேலும் எப்படியும் சாளக்கிராமத்தை ஸேவித்துவிட வேண்டும் என்ற ஆசை பொங்கிப் பெருகிற்று ஆனல் சாளக்கிராம யாத்திரை மிகவும் கடினமானது என்று இடையிடையே பலர் என்னைத் தடுத்தார்கள்.

1972ல் ஸ்ரீமத் பரமஹம்ஸ த்ரிதண்டி ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமி திருமலையில் ஸஹஸ்ரக்ரது யாகம் நடத்திய போது 38 நாள் அவருடன் கூடவிருந்து தொண்டாற்றினேன். அப்போது தீர்த்தப்பன் என்கிற ஒரு ஸ்ரீரங்கம் யாத்ரிகர் ஒருவர் சாளக்கிராமம் சென்றுவந்த செய்தியை அறிந்தேன். அவருக்குக் கடிதம் எழுதி யாத்திரை விவரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டினேன்.

அவரும் அன்புடன் எனக்கு அவ்விவரங்களை எழுதியனுப்பினார். தீர்த்தப்பனும், K. R. V. என்பவரும் 1961ல் சாளக்கிராம யாத்திரையை மேற்கொண்டார்களாம். போகாராவிலிருந்து 18 நாட்கள் கால்நடையாகவே சென்று சாளக்கிராமத்தை அடைந்தார்களாம். வழியில் அவர்கள் பட்ட கஷ்டங்கள்... அப்பப்பா...... இவையெல்லாம்கூட என்னைப் பயமுறுத்தவில்லை. ஆனால் எப்படியும் சாளக் கிராமத்தை சேவித்துவிட வேண்டும் என்றிருந்த என்னையும் கலக்கிவிட்டது மற்றொரு சம்பவம். அதாவது 18 நாட்கள் கால்நடையாகவே சென்று சாளக்கிராமத்தை சேவித்துவிட்டு மீண்டும் கால் நடையாகவே போகாரா வந்தடைந்தவுடனே யாத்திரைக் களைப்பினால் தீர்த்தப்பனுடைய நண்பரான K. R. V. என்பவர் போகாராவிலேயே இறந்து விட்டார் என்ற தகவல்தான் அது.

(தொடரும்)

## ஆயுள் சந்தா அளித்தவர்கள்

21. ஸ்ரீ ரங்கராஜன், சென்னை.

22. ஸ்ரீராமானுஜ சுப்ரபாத கோஷ்டி, சென்னை-1.

23. ஸ்ரீ T. A. திருவேங்கடாசாரியர், சென்னை-18.

24. ஸ்ரீ K. செல்லப்பா, சென்னை-62.

25. ஸ்ரீ E. S. பூவராஹாசாரியர், பெங்களூர்-10.

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீவசனபூஷணத்தின் கடைசி ப்ரகரணத்தில் பல முக்ய மான விஷயங்கள் பேசப்பட்டுள்ளன. ஒன்றை மட்டும் இங்கு வலியுறுத்துவது அவச்யமென்று காட்டுவோம். "பகவல்லாபம் ஆசார்யனுலே; ஆசார்யலாபம் பகவானுலே; உபகார்ய வஸ்து கௌரவத்தாலே ஆசார்யனிற்காட்டில் மிகவும் உபகாரகன் ஈச்வரன்" என்பவை சில மணிகள். பகவத்க்ருபையாலேயே ஸதாசார்யஸம்பந்தம் நமக்குக் கிட்டுகிறது. ஸதாசார்யஸம்பந்தத்தின் பலனுய் ஈச்வர ஸாம்ராஜ்யம் நமக்குக் கையிலங்கு நெல்லிக்கனியாய் ப்ராப்தமாகிறது. இவற்றுள் ஆசார்யன் உபகரிக்கும் (காட்டித்தரும்) வஸ்து உயர்ந்ததா? ஈச்வரன் உபகரிக்கும் வஸ்து உயர்ந்ததா? எனில்: காட்டித் தரப்பட்ட வஸ்து (உபகார்ய வஸ்து) வின் சிறப்பைப் பார்க்கில் ஈச்வரன் தருமதே சிறப்புடைத்து. ஆகையால் ஈச்வரனே சிறந்த உபகாரகன் என்ற முடிவு காட்டப்பட்டது. இது எப்படி பொருந்தும்? என்ற கேள்வி உடனே எழும். இதற்கு ஸமாதானத்தை லோகாசார்யனே அருளிச் செய்துள்ளார்.

"ஈச்வரஸம்பந்தம் பந்தமோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவாய் இருக்கும். ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷத்துக்கே ஹேதுவாய் இருக்கும். ஈச்வரனைப் பற்றுகை கையைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோ பாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப் பிடித்துக் காரியம் கொள்ளுமோ பாதி" என்பவை ஸமாதானமான வாக்யங்கள்.

கையைப் பிடித்தால் உவந்து காரியம் செய்து தரலாம் உதறி விடவும் விடலாம். அதாவது நமது கருமவினைகளையே கணக்கிட்டு இந்த ஸம்ஸாரத்திலே இருத்தி வைக்கலாம். அல்லது தனது மட்டற்ற காருண்யத்தினுல் உந்தப்பட்டு தன் தாளிணைக்கீழ் வாழ்ச்சியளிக்கலாம்.

"அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்" என்கிறபடியே திருவடிகளைப் பிடித்துக் கொண்டால் தள்ளிவிடப்போகாது.

ஆசார்யன் எம்பெருமானுடைய திருவடிகளே. ஆசார்யன் இவனுடைய தோஷங்களைக் கணிசிப்பதில்லை யாதலால் பகவானிடம் சேர்ப்பித்தே தீருவான். மேலும் "ரங்கராஜ : வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ!" என்ற யதிராஜவிம்சதி ஸ்ரீஸூக்திப்படி எம்பெருமான் ஆசார்யனிட்ட வழக்காய் இருப்பதால் அவன் சொல்லைத் தட்டமாட்டாமல் அங்கீகரித்தே தீருவான்.

"ஸ்வாபிமானத்தால் ஈச்வராபிமானத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமான மொழிய கதியில்லை" என்று பிள்ளை பலகால் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும் என்பது இந்த ப்ரகரணத்தில் மிக முக்கியமான திருவாக்கு. "எல்லா விதத்திலும் பகவானிட்ட வழக்காய் அவனுக்குப் பரதந்த்ரரா யிருப்பதே நம் ஸ்வரூபம்" என்ற உண்மை நம் மனதில் பட்டாலும், பெரும்பாலும் நாம் செயல் படுவது, "நம் முயற்சியினுலேயே எல்லாக் காரியங்களையும் ஸாதிக்க வல்லோம் — நம்மை நாமே ரக்ஷித்துக் கொள்ள வல்லோம்" என்ற அடிப்படையில்தான். இதனால் பகவானுடைய நல்லெண்ணம் (அபிமானம்) நம்மிடை பாய்வதில்லை. இப்படி ஈச்வராபிமானத்தை அழித்துக் கொள்ளும் நமக்குப் புகல் ஆசார்யாபிமானமே. ஆசார்யன் நம் தோஷத்தைப் பாராமல் "இவன் நம்மை அண்டினவன். இவனைக் கட்டாயம் பகவத் விஷயத்துக்கு இலக்காக்க வேண்டும்" என்ற நல்லெண்ணத்துடன் ஈச்வரனிடம் கொண்டு சேர்ப்பிக்க, அவனும் தட்டாமல் சேர்த்துக் கொண்டு வாழ்ச்சியளிப்பான். இந்த ஆசார்யாபிமான மொழிய நமக்கு வாழ்ச்சிக்கு வேறு கதி இல்லை என்று ஸதாசார்ய ஸேவை மூலம் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் கற்றறிந்த வடக்குத் திருவீதிப் பிள்ளை பலகாலும் அருளிச்செய்யக் கேட்டதாக உலகாரியன் திருவாக்கு. ஆக, **ஆசார்யாபிமானமே உத்தாரகம்** என்பது நிருபிக்கப்பட்டதாயிற்று.

———

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்
**3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி 6200017.**

# விண்ணுளாரிலும் சீரியர்படை அழகர்மலையைக் காப்போம்

S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M. A. B.L. Advocate
*(ஸுதர்சனம் ஆசிரியர்)*

**வேதனை, வெண்புரிநூலனை, விண்ணோர் பரவ நின்ற
நாதனை, ஞாலம் விழுங்கும் அநாதனை, ஞாலம் தத்தும்
பாதனை, பாற்கடல் பாம்பணைமேல் பள்ளிகொண்டருளும்
சீதனையே தொழுவார், விண்ணுளாரிலும் சீரியரே.**

*[திருவிருத்தம் 79]*

நமது விஶிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ தர்ஶனத்துக்கு 'இந்து' மதத்தைச் சேர்ந்த 'ஸ்ரீவைஷ்ணவ விரோதிகளால்' கணக்கற்ற இன்னல்கள் நேர்ந்து இருகின்றன. பல வருஷங்களாக எடுத்துக்காட்டியும் அவர்கள் செவி சாய்ப்பதாயில்லை. ''வைஷ்ணவர்கள் கோழைகள்; அவர்களால் என்ன செய்து விடமுடியும்?'' என்னும் ஆணவத்தாலே மேலும் மேலும் இன்னல்களைப் புரிந்துவருகிறார்கள். 'இதற்குப் பரிஹாரம் என்ன?' என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் அடியேனைக் கேட்டு வருகிறார்கள். இதற்கு உடனடியாக பதிலுரைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது

''உறுதியுள்ளவர்கள் ஆயிரக்கணக்கிலும், லக்ஷக்கணக்கிலும் இல்லாவிடில் எந்த மதமும் உயிர் வாழ முடியாது''

எனும் உண்மை எக்காலத்துக்கும் பொருந்தும். பத்திரிகை
கள் முதலான ப்ரசார சாதனங்கள் மூலம் வைஷ்ணவத்தை
அழிப்பதற்குப் பெருமுயற்சி செய்யப்பட்டு வரும் இக்காலத்தில்
இது மிகப் பொருந்தும். நமது வைஷ்ணவ மதத்திற்கு வேண்
டிய அடிப்படையான உறுதியை தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள
பாசுரத்தில் நம்மாழ்வார் நமக்குக் காட்டியுள்ளார். 'எம்பெரு
மான் ஒருவனையே தொழுவது' (சீதனையே தொழுவது)
என்னும் உறுதியுள்ளவர்கள் நித்யஸூரிகளைக் காட்டிலும்
சிறந்தவர்கள் என்று பாராட்டுகிறார் நம் குல முதல்வரான
நம்மாழ்வார். இங்கு 'சீதன்' என்றது 'श्रीदः' (ஸ்ரீத3)
என்னும் திருநாமத்தின் தமிழ்வடிவமேயாகும். இவ்வுலகச்
செல்வங்களையும், மோக்ஷச் செல்வத்தையும் ஒருபடிப்படக்
கொடுக்கவல்லவன் என்பது இத்திருநாமத்தின் பொருள்.
இப்படிப்பட்ட எம்பெருமான் ஒருவனையே தொழுவது எனும்
உறுதியுள்ளவர்கள் மிகக் குறைந்துவிட்டதாலேயே இன்று
வைஷ்ணவத்திற்கு அதன் விரோதிகளால் பற்பல இன்னல்கள்
இழைக்கப்பட்டு வருகின்றன இவ்வுறுதியுள்ளவர்கள் ஆயிரக்
கணக்கில் படையாகத் திரண்டாலொழிய, அந்த விரோதி4கள்
நம் த3ர்ஶனத்தை அழிக்கச்செய்யும் முயற்சிகளிலிருந்து பின்
வாங்க மாட்டார்கள். ஆகையால் பிராட்டியுடைய திருவருளை
யும், எம்பெருமானுடைய திருவருளையும், திருமாலால் அருளப்
பட்ட ப்ரபன்னஜன கூடஸ்த2ரான நம்மாழ்வாருடைய திருவரு
ளையும், மற்ற ஆழ்வாருடைய திருவருளையும். விஶிடாத்3வைத
ஸ்ரீவைஷ்ணவ த3ர்ஶனஸ்தா2பகரான எம்பெருமானாருடைய
திருவருளையும், அவருக்கு முன்னும், பின்னும் எழுந்தருளி
யிருந்த மஹாத்மாக்களான பற்பல மஹாசார்யர்களுடைய
திருவருளையும் துணைகொண்டு ஸித்3தா2ர்த்தி2 வருஷம்
வைகாசி மாஸம் 1-ஆம் தேதி (15-5-79) மூல நக்ஷத்திரம்
கூடிய இந்த சுப தினத்தில் 'விண்ணுளாரிலும் சீரியர் படை'
என்னும் படையைத் தொடங்குகிறோம். இதற்கு ஸ்ரீவைஷ்ணவ
மடா2திபதிகளும், ஆசார்ய புருஷர்களும், வித்3வத்3வரிஷ்டர்

களும் தங்களுடைய மங்க₃ளாசாஸனத்தை அருள்வார்களாக நமது ஸஹோதர ஸ்ரீவைஷ்ணவ பத்திரிகைகளான ஸ்ரீராமாநுஜன், கீ₃தாசார்யன், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீரங்கநாதபாதுகா ஆகிய பத்திரிகைகளும் நமது இந்த வேண்டுகோளை வெளியிட்டு ஆயிரமாயிரமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் இப்படையில் சேருவதற்கு உதவி புரிவார்களாக

இப்படை உடனடியாகத் திரளவேண்டியதன் அவசியத்தை இன்று நமது நண்பர் திரு T ஸ்ரீநிவாசராகவன், அட்வகேட் (49, வடக்கு வெளிவீதி, மதுரை-1) அவர்களிடமிருந்து வந்த கடிதம் வலியுறுத்துகிறது. அழகர்மலைக்கு அறநிலையத்துறையின் ஆதரவோடு சைவர்களாலும் அத்₃வைதிகளாலும் மறுபடியும் பேராபத்து நெருங்கி வருவதை நாம் இரண்டு வருடங்களாகக் காட்டி வருகிறோம். இதற்காக அறநிலையத்துறையினரால், பெருமாள் வருடந்தோறும் எழுந்தருளும் நூபுரகங்கைக்கு அருகில் காட்டிலாகாவிடமிருந்து ஒரு விஸ்தாரமான இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் பழமுதிர்சோலை முருகன்கோவில் கட்ட ஓர் கமிட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. நமது வேண்டுகோளின் பேரிலும், பல ஸ்ரீவைஷ்ணவ மஹனீயர்களின் வேண்டுகோளின் பேரிலும் ஸ்ரீவைஷ்ணவ சமூஹத்தின் சார்பாக மதுரை அட்வகேட் ஸ்ரீ T. ஸ்ரீநிவாசராகவன் அவர்கள் அறநிலையத்துறைக்கு சட்டப்படி நோட்டீஸ் கொடுத்தார். அந்த நோட்டீஸ் கிடைத்தவுடன் பழமுதிர்சோலை முருகன்கோவில் கமிட்டியார் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிறுத்தியிருந்தார்கள். சமீபத்தில் சர்க்காரிலிருந்து பழமுதிர்சோலை முருகன்கோவில் கட்டுவதற்காக ரூபாய் 50 000 ஒதுக்கீடு செய்து திருப்பணிக் கமிட்டிக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். 1977-ல் ஸ்ரீ T. ஸ்ரீநிவாசராகவன் கொடுத்த நோட்டீஸுக்கு பதிலும் கொடுத்திருக்கிறார்கள். 'நாங்கள் கட்டத்தான் போகிறோம்' என்று அதில் எழுதியிருக்கிறார்கள். வைஷ்ணவர்கள் உடனடியாக நீதிமன்றங்கள் மூலம் தக்க நடவடிக்கை எடுத்து, இதைத்

தடை செய்து, பரிஹாரம் தேடாவிடில் நாம் அழகர் மலையை இழந்துவிடுவோம் என்னும் நிலை ஏற்பட்டுவிட்டது. 'விண்ணுளாரிலும் சீரியர் படையை உடனடியாகத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தம் இதனாலும் ஏற்பட்டுவிட்டது.

இந்தப் படையில் சேருகின்றவர்கள் செய்ய வேண்டியது என்ன? எனும் கேள்வி எழுகின்றது இவர்கள் உடனடியாகச் செய்ய வேண்டியவை இரண்டு காரியங்களாகும் — 1. "ஸ்ரீமந்நாராயணனைத் தவிர வேறு எந்த தெய்வத்தையும் தொழாத பரம்பரையில் வந்த நாங்கள் அந்த மரபைக் காப்போம். அழகர் மலையைக் காப்போம். எங்களுக்குத் தெரிந்தவர்களை இச்சீரியர் படையில் சேர வைப்போம்" என்று எழுதிக் கையெழுத்திட்டு, ஸுதர்சனம் காரியாலயத்திற்கு விரைவில் அனுப்பவேண்டும். இப்படி அனுப்புகிறவர்கள் அழகர் மலையைக் காப்பதற்காக ரூபாய் ஒன்றுக்குக் குறையாமல் நேரிலோ, M. O. மூலமோ, போஸ்டல் ஆர்டர் மூலமோ அனுப்ப வேண்டும். பல காரணங்களால் படையில் சேர முடியாதவர்களும், அழகர் மலையைக் காப்பதற்குத் தங்களால் இயன்ற தொகையை நமக்கு அனுப்பலாம். சீரியர் படையில் சேர்ந்தவர்களுடைய முழு விலாசமும், அவர்கள் அனுப்பிய தொகையும் அடுத்த மாதம் முதல் ஸுதர்சனத்தில் வெளியிடப்படும். சேராதவர்கள் ரூபாய் பத்துக்கு மேல் செலுத்தினால், அது அவர்கள் விலாசத்துடன் ஸுதர்சனத்தில் வெளியிடப்படும். அழகர் மலையைக் காப்பதற்காக நாம் ரூபாய் 101/- அளிக்கின்றோம். 2. சீரியர் படையில் சேர்ந்தவர்கள் குறிப்பாக இளைஞர்கள் செய்ய வேண்டிய இரண்டாவது காரியம் பின்வருமாறு :— பொது ஜனப் பத்திரிகைகள், வானொலி முதலான ப்ரசார ஸாதனங்களில் விஷ்ணுவையோ, வைஷ்ணவத்தையோ தாக்கி ப்ரசாரம் செய்யப்பட்டால் அதை உடனடியாக நமது கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு ஸுதர்சனர் பதிலில் தக்க பதில் இறுக்கப்படும். அந்த பதிலைத் தழுவி

சீரியர் படையைச் சேர்ந்தவர்கள் அந்தப் பத்திரிகை அல்லது வானொலி நிர்வாகிகளுக்குக் கண்டனக்கடிதம் எழுதவேண்டும் இப்படி ஒவ்வொரு முறை வைணவத்தை இழிவு படுத்தும் போதும் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் கண்டனக் கடிதங்கள் வந்தாலொழிய, வைஷ்ணவ விரோதிகள் வைணவத்தை தொடர்ந்து இழிவு படுத்துவதை நிறுத்தமாட்டார்கள்.

இவ்விரண்டு காரியங்களையும் உடனடியாகச் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, ஸ்ரீவைஷ்ணவர்கள் உறுதி ஒன்றையே ஆயுதமாகக் கொண்டதாய், 'சீரியர் படை' என்று சுருக்கமாக அழைக்கப்படுவதான விண்ணுளாரிலும் சீரியர் படையில் ஆயிரக்கணக்கில் சேர வேண்டுமென்றும், இதைக் கண்ணுறும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒவ்வொருவரும் அழகர் மலையைக் காப்பதற்காகத் தம்மாலியன்ற தொகையை நம் விலாசத்துக்கு அனுப்பவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

---

போன் : கடை : 2512
வீடு : 2612

பட்டு சரிகை சேலைகள் வாங்க
நம்பிக்கையான இடம்

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் சன்

Mg. பார்ட்னர் : V. சங்கரன்

பட்டு சரிகை சேலை & மில் ஜவுளி வியாபாரம்,

184, காந்தி ரோட், காஞ்சிபுரம்-631501.